மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 219/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சின்ன இருசான் | நாள் | 15.11.2023 |
| தகப்பனார் பெயர் | சுருட்டையன் (எ) பூவரசக்கவுண்டர் | | |

**4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

11) என் தந்தை சுருட்டையன் (எ) பூவரசக்கவுண்டர் என்பவருக்கு மொத்தம் 8 வாரிசுகள் என்றால் சரிதான். முதல் வாரிசு கோவிந்தம்மாள் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால், உள்ளார். மேற்படி கோவிந்தம்மாளை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால், இல்லை.

12) என் தந்தையின் இரண்டாவது வாரிசு மாணிக்கம் என்றால், சரிதான். அவர் தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரின் மனைவி பெயர் சந்திரா என்றால் சரிதான். மேற்படி சந்திரா இறந்துவிட்டார். மேற்படி மாணிக்கம் சந்திரா தம்பதியினருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 5 வாரிசுகள். அவர்களில் ஆண் வாரிசுகள் 3 நபர்கள், பெண் வாரிசுகள் 2 நபர்கள். மேற்படி மாணிக்கத்தின் பெண் வாரிசுகளான ஜெயா மற்றும் பழனியம்மாள் ஆகியோரை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால், இல்லை.

13) என் தந்தைக்கு நான் 3 வது வாரிசு என்றால் சரிதான். எனக்கு அடுத்தது வெள்ளையம்மாள் என்ற பெண் வாரிசு உள்ளார் என்றால் சரிதான். மேற்படி வெள்ளையம்மாள் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி வெள்ளையம்மாளை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

14) என் தந்தையின் 5 வது வாரிசு சின்னமுத்து என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால், இறந்துவிட்டார். மேற்படி சின்னமுத்துவின் மனைவி

பெயர் வெள்ளையம்மாள் என்றால் சரிதான். மேற்படி வெள்ளையளம்மான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி சின்னமுத்து வெள்ளையம்மாள் தம்பதிக்கு 3 வாரிசுகள் என்றால் சரிதான். அவர்களில் ஆண் வாரிசுகளான ராஜலிங்கத்தை 5ம் பிரதிவாதியாகவும், மணிகண்டன் என்பவரை 6ம் பிரதிவாதியாகவும் இவ்வழக்கில் சேர்த்தியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சின்னமுத்து வெள்ளையம்மாள் தம்பதியினரின் பெண் வாரிசான சாந்தி என்பவரை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி குடும்பத்தை மொத்தமாக இவ்வழக்கில் சேர்த்ததால் மேற்படி சாந்தியை தனியாக நான் சேர்க்கவில்லை.

15) என் தந்தையின் 6ம் வாரிசு குஞ்சம்மாள் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால், இல்லை. மேற்படி குஞ்சம்மாளுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. எத்தனை வாரிசுகள் என்றால் ஒரே ஒரு பெண் வாரிசு உள்ளார். மேற்படி குஞ்சம்மாளின் கணவர் சின்னப்பையன் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி குஞ்சம்மாளின் கணவரையும், அவரது மகள் சத்தியாவையும் இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால், இல்லை.

16) என் தந்தையின் 7ம் வாரிசு மாரியம்மாள் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். மேற்படி மாரியம்மாளின் கணவர் பெயர் என்னவென்றால், தற்போது எனக்கு நினைவில் இல்லை. மேற்படி மாரியம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால், 2 பெண் வாரிசுகள், 1 ஆண் வாரிசு உள்ளனர். அவர்களது பெயர் என்னவென்றால், எனக்கு நினைவில்லை.

17) மேற்படி மாரியம்மாளின் கணவர் பெயர் வட்டமலை என்றாலும், மேற்படி மாரியம்மாளுக்கு அமுதா, ராஜாமணி, மற்றும் சிலம்பரசன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றாலும் எனக்கு பெயர்கள் சரியாக நினைவில்லை. என் தந்தையின் கடைசி வாரிசு பெயர் மாரியம்மாள் என்றால் சரியல்ல. அவரது பெயர் சின்னப்பிள்ளை. மேற்படி

சின்னப்பிள்ளை தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். மேற்படி சின்னப்பிள்ளையை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் நினைவில்லை. என் தந்தையின் 5 பெண் வாரிசுகளையும் இவ்வழக்கில் நான் கட்சி சேர்த்துள்ளேனா என்றால், வழக்குரையை படித்து பார்த்தால் தான் எனக்கு தெரியும்.

18) இவ்வழக்கில் என்ன சொத்து விபரம் காண்பித்துள்ளேன் என்றால், தாவா சொத்திற்குரிய சர்வே எண்ணும், பட்டா எண்ணும் தற்போது நினைவில்லை. தாவா சொத்து மொத்தம் சுமார் 2 ஏக்கர் 54 செண்ட் அளவுடையது. அதை 3 பாகங்களாக பிரித்து எனக்கு ஒரு பாகமும், சின்னமுத்து குடும்பத்திற்கு ஒரு பாகமும், மாணிக்கம் குடும்பத்திற்கு ஒரு பாகமும் தர வேண்டுமென கோரியுள்ளேன்.

19) தாவா சொத்தை 3 சம பாகங்களாக பிரித்து அதில் எனக்கு ஒரு பாகம் தரவேண்டும் என தான் என் வழக்குரையில் நான் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு என்ன சக்குபந்தி விபரம் காண்பித்துள்ளேன் என்றால், தாவா சொத்திற்கு மேற்கே சேவாதா – இருசாக்கவுண்டர் ஆகியோரின் நிலம் உள்ளது. கிழக்கில் சந்திரா என்பவரது நிலம் உள்ளது.  தெற்கில் என் சகோதரர் சின்னமுத்துவின் நிலம் உள்ளது. வடக்கில் சேவாதா நிலமும் சில வீடுகளும் உள்ளது. இதன் மத்தியில் தான் சுமார் இரண்டரை ஏக்கர் தாவா சொத்து அமைந்துள்ளது.

20) மேலே நான் சொல்லியுள்ள சொத்துவிபரத்தைதான் என் வழக்குரை சொத்து விபரத்தில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. என் வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தை எந்த பத்திரத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், மேற்படி சொத்து என் தந்தையின் கிரைய சொத்து ஆகும். மேற்படி சொத்து பத்திரம் எந்த வருடத்துடையது என்றால் சரியாக நினைவில்லை. மேற்படி என் தந்தையின் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

21) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பதிவு நகல்தான் என் தந்தையின்

பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் பதிவு நகல் என்றால், சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அசல் ஆவணம் தொலைந்துவிட்டது.

22) மேற்படி 1968ம் வருட கிரைய ஆவணத்தின் அடிப்படையில்தான் இவ்வழக்கில் சொத்து விவரம் காண்பித்துள்ளேனா என்றால், ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஐய்யம்பெருமாள்கவுண்டர் நிலத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தங்கள் நிலத்திற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஐய்யம்பெருமாள் இறந்துவிட்டதால், அவரது வாரிசுகளான முனியக்கவுண்டர், கோவிந்தன், வடிவேல் ஆகியோரிடமிருந்து என் சகோதரன் சின்னமுத்து கிரையம் பெற்றுள்ளார்.

23) மேற்படி, வா.சா.ஆ.1 ஆவணத்தில் தங்களது நிலத்திற்கு தெற்கு என கண்டுள்ள நிலையில், தாவா சொத்திற்கு வடக்குபுறம் என் தந்தைக்கு பாத்தியப்பட்ட வேறு ஏதேனும் சொத்து உள்ளதா என்றால், வடக்குபுறம் இல்லை, கிழக்குபுறம்தான் உள்ளது. மேற்படி கிழபுறம் உள்ளதாக நான் சொல்லும் சொத்தை இவ்வழக்கில் காண்பித்துள்ளேனா என்றால், மேற்படி சொத்தும் மேலே சொல்லியுள்ள இரண்டரை ஏக்கர் நிலத்திற்குள் அடங்கும்.

(4முதல் 6 வரை பிரதிவாதிகள் கேட்டுகொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.